DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 19/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : துரைசாமி | | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.05.2022.

**முதல் விசாரணை:**

நான் வாளவாடியில் வசித்துவருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோனவர் எனது அண்ணன் ஆவார். 29.04.2018 அன்று காலை நான் வீட்டில் இருந்தபோது பாப்பனூத்தில் உள்ள தோட்டத்திற்கு சென்று வருவதாக காலை 10.00 மணிக்கு கூறிவிட்டு சென்றார். மதியம் 02.00 மணிக்கு ராதாகிருஷ்ணன் என்பவர் எனக்கு போன் செய்து முக்கோணம் அருகில் உள்ள கல்லிப்பாளையம் பிரிவு அருகே பாலகிருஷ்ணன் என்பவர் ஓட்ட எனது அண்ணன் பின்னால் உட்கார்ந்துகொண்டு உடுமலை – பழனி ரோட்டில் உடுமலையை நோக்கி வந்து கொண்டிருந்தபோது உடுமலையில் இருந்து பொள்ளாச்சி நோக்கி வேகமாக வந்த இவர்கள் வந்த பைக் மீது மோதி விபத்து ஏற்பட்டு அதில் இருவருக்கும் தலையில் அடிப்பட்டு அவர்களை சிகிக்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தாக கூறினார். உடனே நான் மருத்துவமனைக்கு சென்று விபத்தில் அடிப்பட்ட எனது அண்ணனையும் பாலகிருஷ்ணனையும் பார்த்தபோது மருத்துவர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்ல கூறி எனது அண்ணனை

ஆம்புலன்சில் ஏற்றியபோது இறந்துவிட்டார். பின்பு அவரை உடுமலை அரசு மருத்துவமனைக்கே கொண்டு வந்தோம். மேற்படி பால கிருஷ்ணன் என்பவரை கோவை அரசு மருத்தவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தோம். இது சம்பந்தமாக உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அசாஆ.1 ஆகும். போலிசார் பிரேத விசாரணை செய்து இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 19/2020 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.2<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராதாகிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.05.2022.

**முதல் விசாரணை:**

நான் பூலாங்கிணரில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதியம் 02.00 மணி அளவில் வேலைக்கு சென்று விட்டு கல்லிப்பாளையம் பிரிவு அருகே நடந்து வந்து கொண்டிருந்தபோது. கூட்டமாக இருந்தது போய் பார்த்தபோது 2 நபர்கள் விபத்தில் அடிப்பட்டு கிடந்தார்கள் அவர்களில் ஒருவருக்கு தலையில் காயமும், மூக்கில் இரத்தம் இருந்தது. அதில் ஒருவர் எனக்கு முன்பே தெரிந்த ராஜேந்திரன் ஆவர் எனவே அவரது தம்பி பாபுவுக்கு தகவல் கூறிவிட்டு நான் மேற்படி இருவரையும் ஆம்புலன்ஸ்மூலம் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்பு சிகிச்சை பலனின்றி ராஜேந்திரன் இறந்த விவரத்தை தெரிந்து கொண்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**